**வத்தளை பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வத்தளை பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வத்தளை பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொது வைப்பு பதிவேட்டில் இரண்டு வகை வைப்புக்களில் 35 வைப்புக்களின் பெறுமதி ரூபா 1,621,492 தொகை இறுதிக் கணக்கில் தவறவிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். இறுதிக் கணக்கு அச்சிடும் போது இந்த தவறு ஏற்பட்டிருந்ததுடன் பின்னர் அது சரிசெய்யப்பட்டுள்ளது. | சகல பொது வைப்புக்களின் பெறுமதிகளையும் இறுதிக் கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வைப்பின் பெறுமதி ரூபா 41,936 இறுதிக் கணக்கில் ரூபா 419,363 ஆக கொண்டு | ஏற்றுக்கொள்கின்றோம். பதிவேட்டில் உள்ளடக்கும் போது தவறினால் இலக்கமொன்று மேலதிகமாக | பெறுமதிகளை சரியாக இறுதிக் கணக்குகளுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | வரப்பட்டமையால் வைப்பு ரூபா 377,427 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பதியப்பட்டுள்ளது. பின்னர் அது சரிசெய்யப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |
| (இ) | வைப்பு பதிவேட்டில் காணப்படாத இரண்டு வகையான வைப்புக்களில் 15 வைப்புக்களின் ரூபா 414,463 பெறுமதியொன்று இறுதிக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். வைப்பு விடயத்திற்குப் பொறுப்பான புதிய உத்தியோகத்தரால் பதிவேடுகள் நாளதுவரையாக்கும் போது தவறு ஏற்பட்டுள்ளது. பின்னர் அது சரிசெய்யப்பட்டுள்ளது. | சகல வைப்புக்களுக்கும் வைப்பு பதிவேடு ஒன்று தயாரித்து இறுதிக் கணக்கிற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் விடுவிக்கப்பட்டிருந்த 05 ஒப்பந்தங்களின் நிறுத்தி வைத்தல்களின் பெறுமதி ரூபா 505,204 இறுதிக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். வைப்பு விடயத்திற்குப் பொறுப்பான புதிய உத்தியோகத்தரால் பதிவேடுகள் நாளதுவரையாக்கும் போது தவறு ஏற்பட்டுள்ளது. பின்னர் அது சரிசெய்யப்பட்டுள்ளது. | வைப்பு மீதிகளை சரியாக கணக்குகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இரண்டு கம்பெக்டர் வண்டிகளின் கடன் தவணைப் பணம் ரூபா 10,080,000 இனை அறவிடக்கூடிய பயன்பாட்டு சேவைக் கணக்கில் சீராக்காமல் அப்பெறுமதியால் மிகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். 2020 ஆம் ஆண்டில் நாட்குறிப்பின் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. | திரண்ட நிதியத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | நடைமுறையல்லா செலவினங்களுக்காக அரசாங்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றல்கள் ரூபா 78,408,018 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 2017 இன் இலக்கம் 9.9 இன் பிரகாரம் வருமானமாக இனங்காணும் நியதிகளின் பிரகாரம் சீராக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 2017 இன் இலக்கம் 9.9 இன் பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் விரிவான வருமானத்தில் இருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 2019 ஆம் ஆண்டில் கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 718,356 தவறினால் வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட தவறை சரிசெய்யும் போது வைப்புக் கணக்கில் வரவு வைப்பதற்கு பதிலாக இருப்பு மற்றும் ஒதுக்கக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் சீராக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | இருப்பு மற்றும் ஒதுக்க கணக்கில் ரூபா 45,504,767 தொகையான மீதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் உரிமை மூலதனத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | ஏற்றுக்கொள்கின்றோம். 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் உரிமை மூலதனத்தின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டில் காணி மற்றும் கட்டிடங்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கின் மீதி ரூபா 248,415,167 தொகை மீளாய்வாண்டின் சனவரி 01 ஆந் திகதி உள்ளவாறு காணி மற்றும் கட்டிடங்களாக இருப்பு மற்றும் ஒதுக்கக் கணக்கில் ரூபா 200,000 தொகை குறைத்து சீராக்கப்பட்டிருந்தது. பட்டோலைகளிலும் குறைத்து பதியப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். காணி மற்றும் கட்டிடங்களை 2021 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பட்டோலை மற்றும் கணக்கில் தவறவிடப்பட்ட ரூபா இரண்டு இலட்சம் (ரூபா 200,000.00) பெறுமதியின் வழுவை உறுதிப்படுத்தி நாட்குறிப்புக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்குகளில் சரியாக சீராக்குதல் வேண்டும். |
| (ஒ) | மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 389,015,608 மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான நிதியுதவி மூலமான பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 45,391,670 தொகை இருப்பு மற்றும் ஒதுக்கக் கணக்கில் சீராக்கப்படாமல் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது. | இனங்காணப்படாத வைப்புக்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிக்கும் அதற்குரிய நேரொத்த அறிக்கையின் பிரகாரமான பெறுமதிகளுக்கும் இடையே ரூபா 1,376,998 வேறுபாடொன்று காணப்பட்டது. | இந்த வேறுபாடுகள் தொடர்பாக கண்டறிந்து சரிசெய்யப்படும். ஏற்றுக்கொள்கின்றோம். 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் பட்டோலைகளுக்கு இடையிலான மீதிகளை இணக்கம் செய்து கணக்குகளை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 751,883 கூட்டுத்தொகையான 02 மீதிகளை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். இந்தக் கணக்குகளுக்கான ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகளை கண்டறிவதற்கு முடியாதுள்ளது. மேலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படும். | சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 219 ஆம் பிரிவு | பிரதேச சபையின் எந்தவொரு உறுப்பினரும் அல்லது ஊழியருக்கும் பிரதேச சபையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஏதாவதொரு உடன்படிக்கை அல்லது வேலையொன்றின் நிதி தொடர்பாக நேரடியாக அல்லது மறைமுகமாக ஈடுபட முடியாதிருந்த போதிலும் சபையின் உறுப்பினரின் மனைவிக்கு விழா மண்டபம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 2009 மே 30 ஆந் திகதி முதல் அறவிட வேண்டிய ரூபா 974,800 நிலுவை வாடகை மீதி காணப்பட்டது. | ஏற்றுக் கொள்கின்றோம். | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.8 போதியளவு அதிகாரபலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஏப்ரல் 26 ஆந் திகதிய LGD/04/2016 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கைக்கு முரணாக மாவட்ட உதவி ஆணையாளரின் அங்கீகாரமின்றி 2018 ஆம் ஆண்டில் ரூபா 80 மில்லியன் தொகை, 2020 ஆம் ஆண்டில் ரூபா 60 மில்லியன் மற்றும் 2021 ஆம் ஆண்டில் ரூபா 20 மில்லியன் ஆன நிலையான வைப்புக்கள் பணமாக்கப்பட்டிருந்ததுடன் நிலையான வைப்பை பணமாக்கி கொள்ளும் அடிப்படை நோக்கமாக வியாபார கட்டிடத் தொகுதி மற்றும் சுடலைக் கூடத்திற்கு செலவிடப்படாமல் பொது நிர்வாக நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் 2016.04.26 ஆந் திகதிய LGD/04/2016 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதிமீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 257,160,854 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,483,963 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதவரியும் வரியும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிக்கும் அதற்கு நேரொத்த அறிக்கையின் பிரகாரமான பெறுமதிக்கும் இடையே ரூபா 4,337,332 வேறுபாடொன்று காணப்பட்டது. நிலுவையாக இருந்த காலம் 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையில் ரூபா 18,930,318 தொகை, 5 வருடங்களுக்கும் 10 | விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதிவழிக்கப்பட்ட சகல அரசாங்கத்தின் காணிகளிலும் குடியிருப்பவர்களின் ஆதனவரி அளவு கணனி மென்பொருள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு | நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கும், ஆதனவரி அலகுகளை இனங்காண்பதற்கும், ஆதனங்களை தடை செய்து நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கும், நிதிக்கூற்றுக்கள் |

| | | |
|---|---|---|
| வருடங்களுக்கும் இடையே ரூபா 19,040,989 மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 14,546,536 தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்த நிலுவை ஆதனவரி மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற வெலிசர, பமுணுகம, ஹெந்தல உப அலுவலகங்களில் முறையே ஆதனவரி அலகுகள் 1587 இல் இருந்து ரூபா 6,279,966 தொகை, 986 அலகுகளிலிருந்து ரூபா 1,966,759 மற்றும் 4144 அலகுகளிலிருந்து ரூபா 18,275,500 தொகையுமாக நிலுவை ஆதனவரி காணப்பட்ட போதும், ஆதனங்களை தடை செய்தல் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>மேலும் ஆதனவரி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக புதிய ஆதனவரி அலகுகள இனங்காணும் வகையில் முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் இறுதித் தடவையாக சபை அதிகாரப் பிரதேசத்தில் அசைவுறாத ஆதனங்களின் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு 10 வருடங்களை விஞ்சியிருந்தமையினால் 58,003 ஆதனங்களில் இருந்து தற்போதைய மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் ஆதனவரி அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | அகற்றப்பட்டமையால் 2016 ஆம் ஆண்டில் நிலுவை ஆதனவரி சேகரித்தல் தொடர்பாக காணப்படுகின்ற எழுந்த பிரச்சினைகளாகும். அந்த விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் இந்த வேறுபாட்டை சரி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். புதிய ஆதனவரி மதிப்பீடொன்றிற்காக உரிய ஆவணங்கள் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் போது மதிப்பீட்டிற்காக தேவையான தகவல்கள் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த துடன் நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோயின் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. புதிய ஆதனவரி மதிப்பீட்டிற்காக உரிய ஆவணங்கள் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஆதனங்களை தடை செய்தல் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்படும். | மற்றும் பட்டோலைகளுக்கு இடையிலான மீதிகளை இணக்கம் செய்து கணக்குகளை பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.2.2 நீண்டகால வாடகை ஆதனங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நீண்டகாலம் வாடகைக்கு வழங்கப்பட்ட ஆதனங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020.12.31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவையில் 2021.04.30 ஆந் திகதி வரையில் ரூபா 1,108,460.89 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆதனங்களில் முப்பத்தொன்று (31) இற்காக 2020 ஆம் | புதிய மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்கும், நிலுவை வாடகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| மேலும், 166 ஆதனங்கள் சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட போதும் 2016 திசெம்பர் 14 ஆந் திகதி 49 ஆதனங்களுக்காக மாத்திரம் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த 49 கடைகளுக்காகவும் 2020 ஆம் ஆண்டில் புதிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மிகுதி 117 ஆதனங்களுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் போது மதிப்பீட்டு அறிக்கை பெற்று அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் ஏழுபத்து நான்கு (74) இற்காக புதிய வியாபார கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப்படுகின்றமையால் பூர்த்தியடைந்தவுடன் உடனடியாக புதிய மதிப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தாமதமின்றி சபைக்குச் சொந்தமான மிகுதி ஆவணங்கள் யாவற்றையும் மதிப்பீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். ஹெந்தல சந்தைக் கட்டிடத் தொகுதியின் கட்டிடத்தில் 2007 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட நிலுவை பணமான ரூபா 5,297,637 தொகையை அறவிடுவதற்கு முடியாத தொகையாக கருதி பதிவழிப்பதற்கான அங்கீகாரத்திற்காக உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.<br><br>கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக சந்தை மூடப்பட்டமையினால் வாடகையாளர்களுக்கு சலுகை வழங்குவதற்காக ரூபா 702,439 தொகையை பதிவழிப்பதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் உக்குகின்ற கழிவுகள் 16 தொன் மற்றும் உக்காத கழிவுகள் 07 தொன் என சேகரிக்கப்பட்ட போதும், 2008 யூலை 30 ஆந் திகதிய 1560/06 ஆம் இலக்க, 2008 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க மற்றும் 2011 யூலை 05 ஆந் திகதிய 1713/11 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் கழிவுப்பொருள் வரி கட்டணம் விதிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் சபைக்கு கழிவுப்பொருள் வரியாக பெறக்கூடியதாகவிருந்த கவனத்தில் கொள்ளக்கூடிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கழிவுப்பொருட்களுக்காக கட்டணமொன்றை அறவிடுவதற்காக இருபது (20) தனியார் நிறுவனங்களுக்கு அதிகமான எண்ணிக்கையில் கலந்துரையாடப்பட்டுள்ள துடன் ஆரம்பமாக 2021.06.01 ஆந் திகதி முதல் கெரவலப்பிட்டி பரடைஸ் நிறுவனத்திலிருந்து மாதாந்த கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### (ஆ) பொதுமக்கள் முறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது கிடைக்கப் பெற்ற அனுமதியற்ற நிர்மாணங்கள், மரம் வெட்டுதல் போன்ற 234 பொதுமக்கள் முறைப்பாடுகளில் 35 தீர்க்கப்பட்டுள்ளதுடன் 199 முறைப்பாடுகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்ட போதும், அநேகமான முறைப்பாடுகளுக்காக இறுதியான தீர்வொன்றை வழங்குவதற்கு நிறுவனத்திற்கு மேலதிகமாக ஏனைய நிறுவனங்களின் தேவை முன்னின்றமையால் தாமதமடைந்தமையின் காரணமாக தீர்வொன்றை வழங்குவதற்கு முடியாதிருந்தது. | பொதுமக்கள் முறைப்பாடுகளுக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான திக்ஓவிட்ட இல் 02 ஏக்கர் 24 பேர்ச் நில அளவில் உயிரியல் வாயு உற்பத்தி | இதற்கான பதிலை வழங்குவதற்கு தேவையான தகவல்கள் | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| செய்வதற்கு 2006 செப்தெம்பர் 01 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றுக்கு 10 வருட காலத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் ரூபா 525,000 நிலுவைத் தொகையொன்று காணப்படும் போது அது அறவிடப்படாமல் 2011 ஏப்ரல் 25 ஆந் திகதி உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு 2011 யூலை 05 ஆந் திகதி முதல் கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபைக்கு ரூபா 25,000 மாதாந்த வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதுவரை நிலுவை ரூபா 2,925,000 ஆக இருந்ததுடன் முன்னைய நிலுவைப் பணத்துடன் மொத்த நிலுவையான ரூபா 3,450,000 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலும் கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையிலிருந்து பெற்று எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 வருமானம் உழைக்கக்கூடியதாகவிருந்த சொத்துக்களிலிருந்து வருமானம் உழைக்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தனியார் வாகன தரிப்பிடம் | | |
| | 02 றூட் 11 பேர்ச் பரப்பளவையுடைய ஹெந்தல அறுவைக்கூட நிலையத்தில் அமைந்துள்ள காணியில் 2014 ஆம் ஆண்டில் ரூபா 02 மில்லியன் செலவில் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அந்த இடத்தில் தற்போது தனியார் பேரூந்து மற்றும் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட போதும் அந்த நிலத்திலிருந்து வருமானமொன்றை உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலம் தொடர்பாக 2021 மார்ச் 04 ஆந் திகதி மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் மாதாந்த வாடகை ரூபா 81,333 ஆகும். அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு முதல் சபைக்கு சேகரிக்க முடியுமாகவிருந்த கவனத்தில் கொள்ளக்கூடிய வருமானமொன்று உத்தியோகத்தரின் | ஏற்றுக்கொள்கின்றோம். 2021 மார்ச் 04 ஆந் திகதிய மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து வழங்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் போக்குவரத்து திணைக்களத்திற்கு வாடகைக்கு வழங்குவதற்காக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வழங்கி வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கவனமின்மையின் அடிப்படையில் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) பிறீத்திபுற கடற்கரையை கவர்ச்சிகரமான கடற்கரை பிரதேசமாக ஏற்படுத்துதல்

| | | |
| --- | --- | --- |
| மேல் மாகாண சுற்றுலா அமைச்சினால் 2013 ஆம் ஆண்டில் பிறீத்திபுற கடற்கரை சுற்றாடலில் வியாபார கொட்டகைகள், மலசலகூட முறைமை, வடிகாணின் அடிப்படையில் நீர்த்தாங்கி மற்றும் சுற்றாடலுக்கு மின் விளக்கு தூண்களை தயாரித்து சுற்றாடலை அழகுபடுத்தி சுற்றலா கவர்ச்சிகரமான பிரதேசமாக உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த சுற்றாடலில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 46,780 மற்றும் 2014 யூலை மாதம் வரை ரூபா 4,300 வருமானமும் சேகரிக்கப்பட்டிருந்த போதும், குளிக்குமிடத்தில் நீர்த்தாங்கி உடைந்து நீர்வழங்கல் தடைப்பட்டிருந்மையினால் 2014 யூலை மாதத்தின் பின்னர் வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன் அந்த இடத்தை சரிசெய்து பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். மேல் மாகாண சுற்றுலா அமைச்சுடன் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சொத்துக்களிலிருந்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3.2 சொத்துக்களை உரித்தற்றதாக்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1988 ஆம் ஆண்டின் போது பேராசிரியர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ணாந்து ஹிமிபானு அவரினால் ரூபா 188,000 பெறுமதியின் அடிப்படையில் நன்கொடை உரித்துறுதியினால் வத்தளை பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட 11 ஏக்கர் 02 றூட் 11 பேர்ச் பரப்பளவான உஸ்வெட்டகெய்யாவ பார்ஸ் வத்த காணி, தலைவர் மற்றும் செயலாளரால் 1991 ஆம் ஆண்டின் போது 57 காணிக் கூறுகள் மற்றும் அதற்கு அண்மித்த எண்ணிக்கையில் பிரித்து நன்கொடை உரித்து மூலம் உரித்தற்றதாக்கப்பட்டிருந்தது. | இதற்காக போதியளவான தகவல்கள் சபையிடம் காணப்படாமையினால் மேலும் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |